முரசொலி பாசறை
சென்னை 06.07.2023

**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்த இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் பெரியார் பல்கலைக்கழகம்.**



# 25 இடம் பொருள் கலைஞர்





# பெரியார் பல்கலைக்கழகம்

**அறிவு ஒளிரும் பாசறை**

‘மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு’ என்பது சமூகத்தைப் புரட்டிப் போட்ட தந்தை பெரியாரின் சுயமரியாதை மிக்க வார்த்தைகள். இதைச் சொன்னது மட்டுமல்ல, அந்த மானத்தையும் அறிவையும் தமிழ்ச் சமூகம் அடைய தன் தள்ளாத வயதிலும் தொண்டு செய்தார். அதனாலையே அவரை ‘தந்தை’ இடத்தில் வைத்துப் போற்றிப் பார்க்கிறது தமிழ்ச் சமூகம்.

வாழ்நாள் முழுவதும் தமிழர் உரிமைக்கான ஆயுதமாகத் திகழ்ந்த அய்யா பெரியார் காலமான பிறகும், அவரை அறிவு புகட்டும் ஆயுதமாக்கிட நினைத்த கலைஞர், உருவாக்கிய கல்விக்கோட்டம் தான் ‘பெரியார் பல்கலைக்கழகம்’.

## சேலம் சந்திப்பால் உதயம்!

உயர்கல்வி அனைவரையும் சென்றடைய புரட்சி செய்தவர் கலைஞர். தான் ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம் தேவையுணர்ந்து கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களையும் உருவாக்கிடுவார். தமிழ்நாட்டின் முதலாவது பலகலைக்கழகமாக 1857-ல் சென்னைப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்நாட்டின் 15-வது பல்கலைக்கழகமாக ‘பெரியார் பல்கலைக்கழகம்’ 1997-ல் தொடங்கப் பட்டது. அதைத் தொடங்கி வைத்தவர் கலைஞர்.

நெருக்கடிகள் பல கடந்து 1996-ல் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற கலைஞர் நெஞ்சில் இரண்டு மாபெரும் சமூக மாற்றத்தை நிகழ்த்திய தலைவர்களின் பெயரில் பல்கலைக்கழகங்களை உருவாக்கிட முனைந்தார். அம்பேத்கர் பெயரில் சென்னையில் சட்ட பல்கலைக்கழகத்தை அமைத்த கலைஞர், தன்னை ஆளாக்கிய பெரியாரின் பெயரைத் தாங்கி பல்கலைக்கழகத்தை உருவாக்க நினைத்தார். அதற்காகத் தேர்ந்தெடுத்த இடம் பெரியாரை பேரறிஞர் முதன்முதலாகச் சந்தித்த சேலம்தான்.

## மூன்று மணிநேர அணிவகுப்பு

சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய நான்கு மாவட்டங்களின் கல்லூரிகளை எல்லாம் ஒருங்கிணைக்க, பெரியார் பல்கலைக்கழகம். இதற்காக சேலம் மாநகர், ஓமலூர் ரோட்டில் கம்பீரமான பணிகள் விரைந்து நடந்து நிறைந்தன.

**லட்சக்கணக்கான மாணவர்களின் கல்வி வெளிச்சத்துக்கான தீச்சுடரை ஏற்றி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.**

தந்தை பெரியாரின் 119-வது பிறந்த நாளை ஆகச்சிறந்த ஒன்றாகக் கொண்டாட நினைத்தார் முத்தமிழறிஞர். அதற்காக அவர் எடுத்த முடிவு தான் பெரியார் பல்கலைக்கழகங்களின் திறப்பு விழா. அதை கோலாகலமாக நிகழ்த்த முனைந்த கலைஞருக்குச் சிறப்பு செய்ய, ‘திறப்பு விழா அணிவகுப்பு’ நடைபெற்றது. அந்த அணிவகுப்பு நடந்து முடிய மூன்று மணி நேரமானது. அந்த முழு அணிவகுப்பையும் நேரில் கண்டு மகிழ்ந்தார் கலைஞர்.

1997-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி, சேலம் மாநகரில் பெரியார் பல்கலைக்கழகத்தைத் திறந்துவைத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். அந்த நிகழ்ச்சியில் அன்றைய கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் முன்னிலை வகித்து சிறப்பு மலரை வெளியிட்டார். ஆளுநர் பாத்திமா பீவி அவர்கள் தலைமையுரையை வழங்கினார். அந்த மேடையில் தன்னிடம் நீட்டிய பல்கலைக்கழகப் பதிவுப் புத்தகத்தில், “இன்று பெரியார் பிறந்த நாள்-மனித சமுதாயத்திற்குச் சுயமரியாதை பிறந்த நாள்-இந்நன்னாளில் பெரியார் பல்கலைக் கழகம் சேலத்தில் தொடங்குவது பெரும் சிறப்பு” என்று எழுதிக் கொடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

## அறிவால் விளையும் உலகு!

பெரியார் பல்கலைக்கழகத்தின் இலச்சினையில் பொறிக்கப் பட்டுள்ளது ‘அறிவால் விளையும் உலகு’ எனும் வாசகம். ‘சமூக அநீதியை அறிவால் வெல்ல முடியும்’ என்ற உண்மையை உணர்த்து வதுதான் அந்தச் சொற்களின் உள்ளார்ந்த பொருள். அந்த அறிவு சமூகநீதி சார்ந்தும் அமைந்திட வேண்டும் என்ற நோக்கோடு சமூகநீதி சார்ந்த படிப்புகளையும் இணைத்து வழங்கி வருகிறது, கலைஞர் அமைத்த பெரியார் பல்கலைக்கழகம்.

மாணவர்களுக்குச் சமூகம் பற்றிய புரிதலை உருவாக்கிட, ‘தந்தை பெரியார் இருக்கை’, ‘பேரறிஞர் அண்ணா இருக்கை’, ‘முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம்’ ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் பணிகளை மேற்கொள்ளத் தனியாக இயக்குநரும் நியமிக்கப் பட்டுள்ளார்.

### திராவிடப் பதிப்பகம்

பெரியார் பல்கலைக்கழக நூலகத்தில் திராவிட இயக்கக் கருத்துகளைப் பரப்பும் பொருட்டு, ‘திராவிடப் பதிப்பகம்’ என்னும் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல் பல்கலைக்கழகம் சார்பில், நடத்தப்பட்ட ‘பெரியாரை வாசிப்போம்’ எனும் நிகழ்ச்சியில் இதுவரையில் 6 இலட்சத்துக்கும் அதிகமான பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்கள் பங்கேற்றுள்ளனர்.

## கருப்பு எனும் கரும்பு

கடந்த 25 ஆண்டுகளில் பெரியார் பல்கலைக் கழகம், பல்கலைக்கழகக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறைகள், இணைவு பெற்ற கல்லூரிகள், இணையவழி மற்றும் தொலைதூரக் கல்வி மையம் என மூன்று முறைகளில் லட்சக்கணக்கான மாணவர்களின் கல்விக்குத் துணை நின்றுள்ளது. அந்த லட்சக் கணக்கான மாணவர்களின் கல்வி வெளிச்சத்துக்கான தீச்சுடரை ஏற்றி வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்.

கலைஞர் உருவாக்கிய, பல பல்கலைக்கழகங்கள் அவர் புகழை பாடும். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடைப் பல்கலைக்கழகம், அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம் என அனைத்தையும் உருவாக்கியவர் கலைஞர்தான். தமிழ்நாட்டின் பள்ளிக் கல்விக்கு வித்திட்டவர் காமராஜர் என்றால், அந்த விளைச்சலில் விளைந்த வர்களைக் கைப்பிடித்து, பல்கலைக்கழகத்துக்கு அழைத்துச் சென்றவர் கலைஞர்தான்.

பெரியார் பல்கலைக்கழகத் தொடக்க விழாவில் “இந்த நாட்டிலே நூறு பெரியார்கள் அல்ல, தமிழகத்தில் இருக்கிற ஆறுகோடி மக்களும் பெரியார்களாக ஆக வேண்டும்” என உரையாற்றி னார் கலைஞர். அத்தகைய பெரியாருக்குப் பிடித்த நிறமே கருப்புத்தான். கருப்பு சமூகநீதியின் நிறமாக இருப்பதாலேயோ என்னவோ சிலருக்கு இன்னமும் ‘கருப்பு’ ஆகாத நிறமாகவே நீடிக்கிறது.

ஆனால், ‘கருப்பு’, உடன்பிறப்புகளுக்கு ‘கரும்பு’. என்றும் கருப்பைத் தோற்கவிடாமல் தூக்கிப் பிடிப்பார்கள் அவர்கள்.!

**...வலம் வருவோம்**

---

## சாதிக் கொடுமைகளை ஆவணப்படுத்துதல்!

சாதியின் பெயரால் நிகழ்த்தப்படும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதற்குச் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் எனத் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வருகிறது. ஆயினும், சனாதன வகுப்புவாத அரசியல் சக்திகள் மக்களிடையே மனமாற்றம் ஏற்படவிடாமல், தொடர்ந்து சாதி ஏற்றத்தாழ்வுகளை ஆதரிப்பதும், அதை ஊக்குவிப்பதும் இந்திய ஒன்றியத்தின் கேடாக உள்ளன.

பகுத்தறிவு, மூடநம்பிக்கை ஒழிப்பு எனப் பல படிகள் உயர்த்தி னாலும், மக்களை பழமைவாதத்தில் வைத்திருப்பதையே சனாதன சக்திகள் விரும்புகின்றன. ’தி தலித் வாய்ஸ்’ (https://twitter.com/ambedkariteIND) என்கிற டிவிட்டர் தளம் இந்தியாவில் நீடித்து வரும் சாதி ஒடுக்குமுறைகளைக் காட்சிப்படுத்துகிறது. சனாதன இந்து மதத்தின் சாதிப் பெருமைகளால் நிகழ்த்தப்படும் கொடுமைகளை பொதுச் சமூகத்தின் முன் காட்சிக்கு வைக்கிறது.

சமீபத்தில், மத்திய பிரதேச மாநிலத்தில் பழங்குடியின இளைஞன் மீது, பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர் பர்வேஷ் சுக்லா என்ற இளைஞன் சிறுநீர் கழிக்கும் காட்சி வெளியாகி இணைய உலகை உலுக்கி வருகிறது. பர்வேஷ் சுக்லா அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. எம்.எல்.ஏ ஆதரவாளர் என்று கூறப்படுகிறது. வகுப்புவாதத்தை மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட மக்கள் மீது அந்த கட்சி கொண்டுள்ள சனாதன பார்வையே இதுதான். வகுப்புவாத, சாதி ஆதிக்க மனநோயாளிகளுக்கு புகலிடமாக பா.ஜ.க. உள்ளதையே இந்த சம்பவம் காட்டுவதாக பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

ஏற்றத்தாழ்வற்ற சமூகத்தை உருவாக்கும் போராட்டத்துக்கு இந்த நிகழ்வுகள் எல்லாம் அறைகூவல் விடுக்கின்றன. அந்த போராட்டத்தில் தமிழ்நாடு முன்னிற்கும்.

## ::ப்ளாஷ்பேக்



### மூன்று ‘துரை’கள்!



தங்கதுரை

என் உடன்பிறந்த சகோதரர்களுக்கும் எனக்கும் தலைவர் கலைஞர்தான் பெயர் வைத்தார். ‘தங்கதுரை’, ‘தம்பிதுரை’, ‘அன்புதுரை’ என்று தூய தமிழ்ப் பெயர்களாக அவை அமைந்தன. அதைத் தொடர்ந்து 1980-ல் மயிலாடுதுறை ஏ.வி.சி. புதிய திருமண மண்டபத்தில், அன்றைய ஒன்றியச் செயலாளராக இருந்த என் மாமா அ.சந்தனத்தின் மகள் திருமண விழா, தலைவர் கலைஞர், ஆசிரியர் கி. வீரமணி ஆகியோரது முன்னிலையில் நடைபெற்றது. அப்போது சிறுவர்களாகிய நாங்கள் தலைவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**–தங்கதுரை, துணை அமைப்பாளர், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033–24473, மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### மொழிப் புரட்சி!

**1965-ஆம் ஆண்டு பிப்ரவரியில், இந்தித் திணிப்புக்கு எதிராக மிகப்பெரிய போராட்டங்கள் நடைபெற்றன. போராட்டம் செய்தவர்கள் மீது பல இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டன. பொள்ளாச்சியில் 10 பேர், குமாரபாளையத்தில் 15 பேர் என துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே போனது. தமிழ்நாடு உணர்ச்சிக் கொந்தளிப்பான நிலைக்குச் சென்றது. கறுப்புக் கொடி காட்டினால், ‘கையை வெட்டுவோம், காலை முறிப்போம்’ என்றெல்லாம் அடக்குமுறைகள் இருந்தன. பல மாநிலங்கள் இந்தித் திணிப்புக்கு எதிராகப் போராடியபோதும், மொழிப் புரட்சியாக மூண்டு எரிந்தது, தமிழ்நாட்டில் மட்டும்தான். தமிழர்கள் மட்டுமே தங்கள் உயிரையே விலையாக பலி கொடுத்துப் போராட்டம் செய்தனர்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 170




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131